ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒவ்வொரு மதஸ்தனும் தன்மதத்தில் கொண்டிருக்கும் கடவுளின் கட்டளைக்கும், பிரமாணங்களாக நம்பின அறநூல்களின் விதிக்கும், மதாசாரியனது ஆக்ஞைக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று அந்தந்த மதஸ்தனும் கையாண்டுவரும் தீர்மானமிது. பெரும்பாலும் இத்தீர்மானத்தை மற்ற மதஸ்தர்கள் கட்டுப்பாடாக ஆதரித்து வருகின்றார்கள். ஹிந்துக்களெனப்படும் வைதிகர்கள் சில ஆண்டுகளுக்கு முந்தி இந்தத் தீர்மானத்தைக் காப்பாற்றி வந்தார்கள். தற்போது அவர்களுள் சிலருக்கு தேசாந்தரத்தவரது பாஷாவேஷாசாரங்கள் பழகிப்போனநிமித்தம் கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விலகி கடவுளைக் கனவிலாவது நினைக்கவும் பிரமாணநூல்களை வேடிக்கையாகவாவது பார்க்கவும் ஆசிரியன் உபதேசத்தில் சற்றாவது செவிசாய்க்கவும் மனமில்லாதவர்களாய் விட்டனர். அதனால் தனக்குப் பரலோக ஸாதனமாகியவைகளை முற்றிலும் விலக்கிவிட்டு கண்டதேகாக்ஷி என்ற கானல் நீரில் காரியத்தைக் கண்டெடுக்கக் கவலையுற்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். பகுத்தறியாமையென்னும் பாலைவனம் விட்டு விலகினாலும், காமவெறியென்னும் கடும் வெய்யில் தணிந்துவிட்டாலும் இவர்கருதிய கானல் நீரெங்கே? அதிலிருந்து காரியம் கண்டெடுப்பதெங்கே? கடைசியாய் ஒன்றும் பலிக்காமல் தாங்கள் மோசம்போனதை உணர்ந்து மோசம் போனதாகக் காட்டிக்கொள்ளாமல் வைதிகர் வழி நடந்து வேண்டிய பலனை அடையவேண்டியதுபோல் வேஷம் போட்டு வைதிகச் சிறுவர்களையும் சிற்சில சிற்றின்பங்களைக் காட்டி அவர்களை தூக்கிவைத்து உற்சாஹமூட்டி தங்கள் மனோபாவத்தைப் போட்டி அவர்களது வைதிக சிரத்தையை விரட்டிக் கெடுத்துவருகிறார்கள். அப்படிச் செய்கின்றவர் புறமதஸ்தர்களையாவது பார்க்கக் கூடாதா? பார்த்துத் தன்னைத் திருத்திக்கொள்ளக்கூடாதா? புறமதஸ்தரில் ஒருவனாவது தன் கடவுளைக் கவனிக்காமலிருப்பானா? பிரமாண நூலைப் பழிப்பானா? மதாசாரியனை மதிக்காமலிருப்பானா? அப்படியிருந்தால் அவனை அந்த மதஸ்தர்கள் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்வார்களா? ஹிந்து மதத்திலோ இப்பேர்ப்பட்ட கட்டுப்பாடு ஒன்றும் கிடையாது. அதனால் சிலர் ஆசார்யாளைத் தூஷித்து பேபரிலும் எழுதுகின்றனர். சிலர் கோவில் குளங்களை இடிக்கத் துக்கவழி தேடுகின்றனர். வேறுசிலர் சிஷ்டாசாரத்தை சீர்குலைக்கப்பார்க்கின்றனர். என்ன ஆபத்து வந்தபோதிலும் பிராசீன ஆசாரத்திலிருந்து அசையாதவரனேகரிருக்கின்றனர். அந்த மஹானுபாவர்கள்தான் சீர்குலைந்திருப்பதைச் சீர்படும்படி செய்யவேண்டிய அனேககாரியங்களைச் சுயநலங்கருதாமல் செய்துவருகின்றனர். அவர்களைப் பின்பற்றி அவர் கூறியபடி நடந்து வைதிகரெனப்பெயரும் பாக்கியமும் கிடைக்கும்படி பாடுபட்டு யாவரும் க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

சுக்ல-௵ பங்குனி-௴ ௨௮௳

## பிரௌடாவிவாஹம் பரமாபத்துக்கிடம்.

சாரதாமசோதா சட்டமாய்விடப்போகிறதென்று சிலநாளும் அது சட்டமாய்விட்டதென்று சிலநாளும், அது அமுலுக்கு வரப்போகிறதென்று சிலநாளுமாக அகமகிழ்ந்து வரதக்ஷிணைப் பிசாசை வெருட்ட நமது காருண்யகவர்ன்மெண்டின் கடினமான உத்திரவே உச்சாடனமந்திரம்போலானதாக ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு நல்லபோது விடிந்ததுபோல் அந்த சட்டமும் அமுலுக்கு வந்துவிட்டது. வந்து 4, 5 நாள் முழுசாக ஆகவில்லை. அதற்குள் பாலிகாவிவாஹமுறையைப்பழித்து பிரௌடாவிவாஹமுறையில் பரமலாபமும் பெரியப் பிரதிஷ்டையும் கிடைக்கப்போவதாக நினைத்துக்கொண்டிருந்து பிரௌடையான பெண்மக்களின் பெற்றோர்கள் பிரௌடையென்னும் பேச்சைப் பெரிய மந்திரமாகக்கொண்டு வரன்வீடு சென்று ஜாதகச்சுவடியை அவிழ்க்கவே, அபிசாரம் செய்தவனுக்கு எதிர்ப்பிரயோகம் செய்ததுபோல் பணத்தாசை வெறிபிடித்த பிள்ளை வீட்டுக்காரன் "அந்தப்பெண்ணு! அதைப்பற்றி வேறுவிதமாகக் காதில் விழுகிறது. ஆயினும் அவத்தைப்பொரு—தவத்தைப்பொரு என்று சொல்லுவதுபோல் முன்பேசியதைக்காட்டிலும் 4000, 5000 அதிகம் கொடுத்தால் ஒருஸமயம் பார்க்கலாம்" என்று வாய்கூசாமல் கூறிவிடுகின்றான். அதைக்கேட்டு திடுக்கிட்டு பயந்து செய்யவேண்டியதின்னதென்றுபுரியாமல் போனபடியே திரும்பி வந்துவிடுவதாகக் காதில் விழுகிறது. அதனால் அப்படிக் கஷ்டப் படுபவரைப்பார்த்தாவது பாலிகைகளின் பெற்றோர்கள்—மதுரையிலும், கும்பகோணத்திலும், மெலட்டூரிலும், தூத்துக்குடியிலும் நடந்த ஸநாதனதர்மிகளின் தீர்மானப்படி பாலிகைகளுக்கே விவாஹம் செய்வதென்றும், அதனால் வரும் ராஜவிட்வாத்தை அநுபவிக்கிறதென்றும் மனிதன் சேர்ந்து செய்த கட்டுப்பாட்டுக்

காக மதாசாரத்தை விடக்கூடாதென்றும் நிச்சயித்து பிராசீன முறைப்படியே பாலிகாவிவாகத்தையே துணிந்துநடத்துவார்களாக. சமீபத்தில் டில்லியில் ஒரு முஸ்லீம் கல்யாணத்தில் "சட்டத்தைமீறிக் கடவுளின் கட்டளையை நிறைவேற்றவேண்டியது" என்று நிர்மானித்து நடத்தின பாலிகாவிவாஹகாலத்தில் ஐனுப் மஹம்மதலி பேசிய "நாம் மனிதருடைய சட்டத்தைவிட ஆண்டவனுடைய சட்டம் விசேஷமானதென்று காட்டக்கூடிய வழிகளில்மாத்திரமே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்பதாதி வீரமொழிகளை மதாசாரவிஷயத்தில் உதாஹரணமாக பார்த்துக்கொண்டது நமது வைதிகஹிந்துக்களும் பிரௌடா விவாஹத்தில் கீழ்க்காட்டியபடி பணத்தாசைப்பிசாசு வெறி பிடித்துவிடுவதை ஆலோசித்தாவது பழையவழக்கப்படியே நடத்துவார்களாக. அப்படி நடத்துவதை இரகஸ்யமாய் மூலைமுடுக்கில்போய் செய்யாமல் பஹிரங்கமாய் அனேகர்கள் முன்னிலையில் நடத்தி நாமே ராஜாங்கத்தாரிடம் தெரிவித்து இதற்குமேலும் மன்றுடி சட்டத்தை ரத்துசெய்ய ஏற்பாடு செய்யவேண்டியது. டில்லியில் நடந்த முஸ்லீம்கல்யாணம் 12000 முஸ்லீம்கூட்டத்தில் நடத்தப்பட்டதாம். அவ்வளவு கூட்டம் கூடினாலும் கூடாவிட்டாலும் பஹிரங்கமாகவே நடத்தவேணும். வந்ததை அனுபவிக்க வேணும், ஒரு ஸமயம் காராகிரஹவாஸம் ஏற்பட்டாலும் ஸ்வல்பப் பிராயச்சித்தத்தால் அதன் தோஷம் விலகக்கூடியதே. ஆகையால் தார்மிகர்கள் தர்மத்தையே பெரிதாக நினைத்து நடத்தி சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

## வரருசி.

(78-வது பக்கத்தொடர்ச்சி.)

வியாடி அவனை அருகில் அழைத்து, பெரிய சந்தோஷத்தைக் கொண்டாடி வஸூதத்தைக்குப் போதுமான பொருளைக் கொடுத்து கண்ணீர்விடுகின்ற அவளைச் சமாதானப்படுத்தி விடைபெற்று, வரருசியோடும், மஹேந்திரதத்தனோடும் பாடலீபுத்திரத்தையடைந்தான். வர்ஷோபாத்தியாயரின் வீட்டையும் அடைந்தான்.

இவன்தானு "ஸகிருத்ச்ருததரன் ஏகச்ருததர:" என்று விக்ஞாபித்துக் கொள்ளப்பட்ட வர்ஷர் சந்தோஷத்தால் நிறைந்தவைகளும் உபவாஸமுள்ளவை போன்றவைகளுமான நேத்திரங்களால் அவனை அவாவோடு உற்றுப்பார்த்துக்கொண்டு என் அருமை சிஷ்யனே! வரவேண்டும் வரவேண்டும் என்று கெட்டியாக தழுவி விரைவாகவே பரிசுத்தமான தரையில் உட்காரச்செய்து தெளிவுள்ளதும் கம்பீரம் வாய்ந்ததுமான ஸம்ஸ்கிருதவாணியால் ஓங்காரத்தை முன்னிட்டு அங்கங்களோடு கூடின வேதங்களை கற்பிக்கத்தொடங்கினர். ஒரு தடவை கேட்பதால் வாருசியும் இருதடவைக் கேட்பதால் வியாடியும், மூன்றுவது தடவை உச்சரிப்பதால் இந்திரதத்தனும் குருவால் சொல்லப்பட்டதை அறிந்து கொண்டனர்.

முன் கேட்டிராததும் ஆச்சர்யகரமாயும் வர்ஷரின் பாழும் வீட்டிலிருந்து பூமியையும் ஆஹாயத்தையும் வியாபிக்கும் அந்த திவ்ய த்வனியைக் கேட்டு ஆச்சர்யத்தால் அசைவற்ற கண்களோடுகூடின உபவர்ஷ நள்பட எல்லாப்பட்டணத்துப்பெரியோர்களும் வர்ஷோபாத்தியாயரின் மகிமையைப் புகழ்ந்துகொண்டுநகரெங்கும் மஹோத்ஸவத்தைக் கொண்டாடினர். நந்த ராஜனும் குமாரக்கடவுளின் வானுல் ஏற்பட்ட வாணீவிலாஸமென்றறிந்து வர்ஷருடைய வீட்டில் கனகவர்ஷத்தைச் செய்தான்.

இவ்வாறு வெகுநாட்கள் செல்லும்போது, குருகுலவாசம் செய்துவரும் வாருசி கிரமமாய் இளம்பிராயம் நீங்கி கல்விக்கடலின் கரைகண்டான்.

பிறகு ஒரு சமயம் இந்திரோத்ஸவத்தைக் காண்பதற்கு இவர் வியாடியோடும் இந்திரதத்தனேடும் வெளிக்கிளம்பி ஓரிடத்தில் எல்லா அணிகளும் பூண்டவளும் மன்மதனின் ஜயக்கொடிபோல் சஞ்சரிப்பவளும் உருவங்கொண்ட லக்ஷ்மீபோன்றவளும் மிருதுவான அங்கமுள்ளவளும் தோழிமார்களோடு விநோதவார்த்தைகளால் தன்னைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருப்பவளும் முன்பு பார்க்கப்பட்டிராதவளுமான ஒருகன்னிகையைக்கண்டார் காணப்பட்டநோத்திலேயே அப்பெண்மணிமன்மதபாணங்களால் துளைக்கப்பட்ட அவருடை மனதில் நுழைந்தாள். சூன்யமான மனதோடு கூடின வாருசியும் அவளையே தியானித்துக்கொண்டு

"தோழனே! அழகுவாய்ந்த ஆஹாரத்தோடு கூடின இந்த துஷ்ட கன்னிகை யார்? யாதொரு இப்பெண் என்மனதைச்சூறையாடிக் கொண்டுபோகிறாளோ என்று இந்திரதத்தனைக்கேட்டார். நகரத்து சமாசாரங்களை அறிந்த அந்த இந்திரதத்தனோவெனில் "பூர்ண சந்திரனுக்கொப்பான முகமுள்ள இவள் நமது உபாத்தியாயரின் தம்பியான உபவர்ஷரின் பெண் என்று அவனுக்கு அறிவித்தான் அதுமுதற்கொண்டு செய்யவேண்டிய வேறுகாரியங்களைமறந்தவனாய் ஊமைப்போலவும், ஜடன்போலவும், செவிடன்போலவும், குருடன் போலவும், சஞ்சரித்துக்கொண்டு அவளையே நினைத்தவனாய் இவ்வுலகையே அவள்மயமாகவே பார்த்துக்கொண்டு இரவு பூராவும் விழித்தவண்ணமாயிருந்தான்.

பிறகு சிரமப்பட்டு வெடிய பாதியாமம் இருக்கும் நேரத்திலே நித்திரையடைந்து கனவில் வெண்மைநிறமுள்ளஉடையுடுத்த தெய்வப் பெண்ணைக்கண்டார். அவளும் இவரை சமாதானப் படுத்தி "பிள்ளையே என்னை உனது சரீரத்தின் உள் வசிக்கும் கலைமகள் என்று அறிந்துகொள். உனது காதலுக்குக் குறிப்பாயுள்ள இவள் உபகோசா எனப்படுவாள். முன்பிறப்பில் இவள் உனது மனைவியே. இந்தப்பிறப்பிலும் உன்னையே விரும்புகிறாள் வேறொருவனை விரும்பாள். ஆகையால் கவலைப்படவேண்டாம் என்று அறிவித்துக்கொண்டே மறைந்தாள். வாருசி விழித்துக் கொண்டு உடனேயே கேசியின் வீட்டில் அருகிலுள்ள சிறிய மாமரத்தின் அடிப்பிரதேசத்தை அடைந்தாள்.

அங்குஉபகோசையின் தோழிமார்களால் ஸம்பாஷிக்கப்பட்டு உள்ளேஅழைக்கப்பட்டவரான இவர் தன்னை நாடியேஅனேகங்களான அநங்கவேதனைகளை அனுபவிக்கின்றவளாக அவளையறிந்தும் குருக்களால் தானம் பண்ணப்படாத கன்னிகையைத் தானாகவே கிரஹித்துக்கொள்ளும் துணிவான காரியத்தில் சந்தோஷிக்கவில்லை. "கீர்த்தியை விரும்பும் விவேகியான புருஷனுக்கு அவ்விதமான உபாயத்தைக் காட்டிலும் இறப்பதே சிறந்தது" என்றும் எண்ணினார்.

பின்பு மிகவும் இளைத்தவளும் சூன்யமான மனதுள்ளவளுமான பெண்ணைக் கண்டு சமாசாரம் அறிந்த உபகோசையின் தாயார் தன் கணவனுக்கும் அவர் மூலமாகவே வர்ஷோபாத்தி

யாயருக்கும் அறிவித்தாள். அவர்களாலும் சந்தோஷத்துடனே விவாஹம் நிச்சயிக்கப்பட்டபோது கௌசாம்பியிலிருந்து வியாடியால் அழைக்கப்பட்ட தாயாரின் அனுமதியையும் பெற்று வாருசி சுபமுகூர்த்தத்தில் அக்னிசாக்ஷிகமாகவே உபகோசையைப்பாணிக்ரஹணஞ் செய்தார். மனைவியோடும் தாயாரோடும் அதே நகரத்தில் அவர் வாழ்ந்து வந்தார்.

காலஞ்செல்லுகையில் வர்ஷோபாத்தியாயரின் கீர்த்தியால் எல்லாதிசைகளும் வியாபிக்கப்பட்டன. நாள்தோறும் சிஷ்யச்செல்வம் பெருகிற்று. கல்விகற்பதற்கு வர்ஷோபாத்தியாயரிடம் அணுகின மாணவர்களில் மிகவும்அற்பபுத்தியுள்ளவரானபாணினி என்று ஒருவர் இருந்தார். குருவுக்குப்பணிவிடை செய்வதாலேயே வருந்தினவராயும், மற்றவர்களால் அடிக்கடி பரிஹசிக்கப்பட்டவராயுமுள்ள அச்சிடனைக்கண்டு தயையால் நனைந்த மனதுள்ள வர்ஷோபாத்தியாயரின் மனைவி "குழந்தாய்! பாணினியே! இந்த வீண் சிரமத்தால் யாதுபயன்? தெய்வத்தின் அனுக்ரஹத்தைப் பெறாமல் உன்னால் கல்வியை வசப்படுத்த முடியாது. ஆகையால் வனஞ்சென்று உமாகாந்தனை தவத்தால் சந்தோஷப்படுத்து" என்று உபதேசித்தாள்.

வைராக்கியங்கொண்ட பாணினியும் அவள் வார்த்தையை வெகுமானித்து பனிமலைசென்று கொடூரமான தவத்தால் சந்திரமௌளியை உபாஸித்தார். சந்தோஷங்கொண்ட சிவபெருமானிடமிருந்து ஸகல வித்யைகளுக்கும் மூலஸ்தானீயமான புதிய வியாகரணத்தையறிந்தார். மறுபடியும் பாடலீபுத்திரத்தையடைந்து வாருசியையே வாதுக்கழைத்தார். அவ்விருவருக்கும் வாதம் நிகழ்ந்தபோது, எழுதினங்கள் சென்றன. எட்டாவது நாளில் வாருசியால் பாணினி தோல்வியடையச் செய்யப்பட்டார். அப்போது ஆகாயப் பிரதேசத்தில் நின்று சிவபெருமான் ஹுங்காரம் செய்தார். உடனேயே அந்த ஐந்திர வியாகரணம் பூமியில் நாசமடைந்தது வாருசி முதலான யாவரும் பாணினியால் தோற்கடிக்கப்பட்டு மூர்க்கர்களானார்கள். திடீரென நேர்ந்த அந்த அநர்த்தத்தை ஸஹியாத வாருசி தேடப்பட்டபொருளை ஹிரண்ணியகுப்தன் என்ற வைசியனுடைய வசத்தில் வைத்துவிட்டு, அதையும் தனிமையில் மனைவியிடம்சொல்லிவிட்டு, அவளால் அனுமதிக்கப்பட்டு ஸ்ரீ சங்கரனை ஆராதிப்பதற்கு தவம் செய்ய ஹிமாலயமடைந்தார்

கொடூரமான தவம்புரியச்சென்ற கணவனுக்கு எவ்வாற்றலும் மங்களத்தை நாடினவளும் பதிவிரதைகளின் முன்நிற்பவளுமான உபகோசை தினந்தோறும் கங்கையில் நீராடிவிட்டு, விரதங்கொண்டவாய் தெய்வங்களைப் பூஜித்துவந்தாள். ஒரு சமயம் கங்கைக் கரையில் சஞ்சரிப்பவளும சந்திரனைப்போல் ஜனங்களின் கண்களைக்கவருகிறவளுமான இவளை ராஜாவின் உபாத்தியாயரும் ஸேநாபதியும் குமாரசிவனும் தற்செயலாகக்கண்டு, மன்மத பாணத்திற்கு லக்ஷ்யமானார்கள். வெகுநேரமாய் நீராடி ஸாயங்காலம் திரும்பிவருகின்ற அப்பதிவிரதையை குமாரசிவன் நடுவழியில் அடமாய்த் தடுத்தான். நாதனற்றவளான அப்பெண்மணி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒருவுபாயத்தையுமறியாதவளாய் அக்கணத்திலேயே உண்டான புத்திசக்தியால் அவனைப்பார்த்து சொன்னதாவது— "மங்களமுள்ளவனே! நான் நற்குலத்தில் ஜனித்தவள். கணவனோ ஊரிலில்லை. அடமாகச் செய்வதற்கு இந்த தேசமும் காலமும் பொருத்தமாயில்லை. நாளையதினத்தில் பட்டணத்து ஜனங்கள் வஸந்தோத்ஸவத்தில் மனதைச் செலுத்துவார்களானதால் இரவில் முதல் யாமத்தில் தாங்கள் எனது வீட்டுக்கு வரவேண்டும்" — என்று.

அவனும் அப்படியே என்று சொல்லிவிட்டு அவளைவிட்டுவிட்டான். பிறகு சிறிது தூரம் செல்லுகிற அப்பதிவிரதாமணியை காமங்கொண்ட புரோகிதன் தடுத்தான். இவனுக்கும் முன்போலவே, அதே இரவில் இரண்டாவது யாமத்தில் ஸங்கேதஞ்சொல்லிவிட்டு, கணவனையே மனதால் நாடிக்கொண்டு அவள் சிறிது தூரம் செல்லுகையில் தண்டாதிபன் தடுக்கவே அவனுக்கும் அதே இரவின் மூன்றாவது யாமத்தைக் குறிப்பிட்டு, தெய்வச்செயலாய் அவனாலும் விடப்பட்டு அவள் தனதுபாக்கியத்தையே அடிக்கடி நிந்தித்துக்கொண்டு-"ஐய் எமதர்மராஜனே' என் என்னைபோக்கிரிகளுக்குயிரைச்சியாக்கவேண்டும். உடல்கெடாமல் அழிவதே எனக்குச் சிறந்தது. கடத்தைக்கெடக்கூடாது. கணவன் யாத்திரையாய்ச் சென்றுவிட்டால் இறந்து போவதே குலப்பெண்களுக்கு சிறந்தது உருவத்தைக்கண்டுகளிக்கும் மனிதர்களின் கண்களுக்குப் புலப்படுவது தகாதது" என்று மனதில் சிந்தித்துக்கொண்டு வருத்தங்கொண்டவளாய் மிகவும் புலம்பலானாள். புலம்புகின்ற அம்மாதை, அவளதுசேடிகள் சமாதனப்

படுத்தி, 'இஷ்டம்போல் இவர்கள் அங்கு வாட்டும். தங்களது துஷ்டத்தனத்தின் பயனை அனுபவிக்கட்டும் என்றனர். அவ்வம் மணி அடிக்கடித் தனது சரீரத்தை நினைத்துக்கொண்டு ஆகாரம் இல்லாமலே கணவனுடைய நற்குணங்களை கீர்த்தனம் செய்தவளாய் நான்குகணங்களைப்போலவே அவ்விரவைக்கழித்தாள். அவள் அதிகாலையில் ஹிரண்யகுப்த செட்டியாரிடமிருந்து பிராம்மண பூஜைக்காக கொஞ்சம் தனத்தை வாங்கிவாவென்று தனதுசேடியை அனுப்பினுள். அச்செட்டியாரும் தானே நேராகவந்து உபகோசலையைத் தனிமையில் அழைத்து 'பங்களமுள்ளவளே' உனது அழகால் மயங்கிக் கிடக்கின்ற என்னைச்சேர் இல்லாவிடில் ஸாக்ஷியில்லாமல் உனது கணவனுல் கொடுக்கப்பட்ட பொருளைத் தரப் போகிறதில்லை' என்று வெட்கமின்றி கூறினுன். இடியால் இடிக்கப்பட்டவள் போல் நடுங்குகின்ற அம்மாது சிறிதுநேரம்இன்னது செய்வது என்று புரியாதவளாய் 'என்னகதி? இந்தப்போக்கிரியும் அந்த தூர்த்தர்களையே பின்பற்றுகிறுன். என்று மனதில் ஒரு விதமாகத் தீர்மானித்துக்கொண்டு அவனுக்கும் அதே இரவில் கடைசியாமத்தில் ஸங்கேதம் செய்து அனுப்பினுள்.

பிறகு ஸங்கேதம் செய்யப்பட்ட இரவு வந்ததும் கெட்டிக்காரிகளான அவளுடைய சேடிமார்கள் முன்பே நன்ருய் ஆலோசனை செய்து கஸ்தூரி முதலான வாஸனை திரவியங்களோடு சேர்ந்த எண்ணெயோடு கலந்த (கஜ்ஜலத்தையும்) கசடையும், அதில் நனைக்கப்பட்ட வஸ்திரகண்டங்களையும் தயார் செய்து ஓர் பெரிய பெட்டியை உள்ளே வைத்து அந்த துஷ்டர்களின் வாவை எதிர் பார்த்திருந்தனர். முதல் யாமத்தில் நல்ல அலங்காரம் செய்து கொண்ட குமாரசசிவன் (कुमार सचिवः) அப்பதிவிரதையின் வீட்டில் இரவில் பிறரால் காணப்படாமல் நுழைந்தான்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

குதிரையைக் கொடுத்தார். அதனாலவர் ஜலரோகத்தையடைந்தார் அந்த ஜலோதரரோகத்தையடைந்த பிரஜாபதியானவர் தனது ரோகத்தின் நிவிருத்தியின்பொருட்டு வருணேஷ்டியைச்செய்தார். உடனே அவர்அந்த ரோகத்தினின்றும் விடுதலையடைந்தாரென்ற அர்த்தவாத வாக்கியமானது உபக்கிரமத்திலிருந்துகொண்டு விதியைக் காட்டினும் மிக துர்பலமாயினும் குதிரைதானம்கொடுப்பவனுக்குத் தான் வருணேஷ்டி செய்யவேண்டுமென்று புலப்படுவதால் தானம் வாங்குபவனுக்கு வருணேஷ்டி செய்யவேண்டியதில்லை என்று கீழ்கண்ட அதிகரணத்தில் விஸ்தாரம் செய்யப்பட்டிருக்கின்றது.

பிரபலதுர்பலமாயிருக்கும் விதி அர்த்தவாதமிவ்விரண்டிற்கும் விரோதம் ஸம்பவித்து விடுமேயானல் ஸ்வபாவத்தில் துர்பல பிரமாணமாகிய அர்த்தவாதத்தை உபக்கிரமத்திலிருப்பதால் பிரபலமாக ஒப்புக்கொண்டு அதையனுசரித்து ஸ்வபாவமாக அர்த்தவாதத்தைக்காட்டிலும் மிகப்பிரபலப்பிரமாணமாயிருக்கும்உபஸம்ஹாரவிதிவாக்கியத்திற்கு லக்ஷணாமூலமாக குதிரைதானம் கொடுத்தவனுக்குத்தான் வருணேஷ்டியென்று அர்த்தநிர்ணயம்செய்யப்படுகின்றது. ஆகவே இவ்வதிகரணத்தால் உபக்ரமத்திலிருக்கும் துர்பல ப்ரமாணத்தை அனுசரித்து உபசம்ஹாரத்திலிருக்கும் பிரபலப்ரமாணத்திற்குங் கூட லக்ஷணை முதலியவற்றால் அர்த்தம் சொல்லவேண்டுமென்றேற்படுவதால் உபக்கிரமத்தையனுசரித்து உபஸம்ஹாரத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமேயொழிய உபஸம்காரத்தையனுசரித்துஉபக்ரமத்தை மாற்றிவிடக்கூடாதென்று ஸித்தமாகின்றது இங்ஙனமாயின் ஸ்மார்த்த விதியானது ஸ்வபாவத்தில் துர்பலமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டாலும் உபக்ரமத்திலிருக்கும் காரணத்தைக்கொண்டு மிகப் பிரபலப்ரமாணமாகவே தான் ஒப்புக்கொள்ளவேண்டும். ஸ்வபாவத்தில் துர்பலமாயினும் உபக்ரமத்திலிருப்பதால் பிரபலமாயிருக்கும் ஸ்மார்த்த விதியால் அறிவிக்கப்படும் ஸ்திரீகளின் விவாஹ வயோவதிவமாகிய அர்த்தத்தை அனுசரித்துத்தான் அவ்விதி வாக்கியத்திற்குப் பிறகு பிரவர்த்தித்திருக்கும் மந்திரலிங்கங்களுக்கு எப்படியாவதுமாற்றி அர்த்தம் சொல்லவேண்டும். இங்கு முதலாவதாக விவாஹம் செய்துகொள்ளும் வதூவரர்களின் வயது, லக்ஷணம் இவை முத

ஷியவைகளை அறிவிக்கும் ஸ்மார்த்த விதிவாக்கியத்திற்குத்தான் பிரவிருத்தி ஏற்படுகின்றது. அதன் பிறகு விவாஹவிதிக்கும் அதற்குப்பிறகு விவாஹத்திற்கு அங்கமாகிய மந்திரங்களுக்கும் பிரவிருத்தி என்று கிரமமானதால், எல்லாவற்றிற்கும் முதலில் பிரவர்த்தித்திருக்கும் வயோநிர்ணய விதியை, பிறகு பிரவிருத்திக்கும் துர்பல லிங்கங்களால் பாதித்து விடுவது ஒருபோதும் இயலாது. உபக்ரமஸித்தமாயிருக்கும் அர்த்தத்தை உபஸம்ஹாரத்திலிருக்கும் விதிவாக்கியத்திற்குங் கூட பாதம் செய்யும் ஸாமர்த்தியமில்லையென்று பூர்வமீமாம்ஸா நியாயமிருக்குமேயானால் உபசம்ஹாரத்திலிருப்பதாயும், ஒரு புருஷனுடைய புத்தி விசேஷத்தால் கற்பிக்கப்பட்டதாயுமுள்ள லிங்கப்ரமாணத்திற்கு, உபக்ரமஸித்தமாகிய அர்த்த விசேஷத்தைமாற்றி விடும் ஸாமர்த்தியமில்லை என்பது சொல்லாமலே விளங்குமன்றோ? ஆகையால் உபக்கிரமத்தில் பிரவிருத்தித்திருக்கும் ஸ்மார்த்த விதியை உபஸம்ஹாரத்தில் பிரவர்த்திக்கும் லிங்கப்ரமாணத்தால் பாதித்துவிடுவது யுக்தமன்றென்று ஸித்தம்.

8. A. அன்றியும் விவாஹமந்திரங்களுக்கு வெகுகாலங்கழிந்த பிறகு வதூவரர்களுக்கு ஸம்பவிக்கப்போகின்ற அர்த்தவிசேஷத்தையுங் கூட லிங்கமூலமாகக் கூறிவிடலாமாகையால் முற்றிலும் நிஷ்பிரயோஜனமாக அவை ஏற்படமாட்டாது. ஸ்மார்த்த விதிவாக்கியத்திற்கோ அப்படியல்ல. விவாஹவயதை அறிவிக்கும் ஸ்மிருதிகளுக்கோவெனின் மந்திரலிங்கத்தைக்கொண்டுத் தனது அர்த்தத்தை பாதித்துவிடும்பக்ஷத்தில் அந்த ஸ்மிருதிகளுக்கு வேறொரு விஷயத்திலும் அவகாசமற்றுவிடுவதால் சிறிதும் பிரயோஜனமேற்படமாட்டாது. எல்லாவிஷயங்களிலும் அவகாசமற்றிருக்கும்ஸ்மார்த்தவிதிகளைக்காட்டிலும், வெகுகாலஞ்சென்று வதூவரர்களுக்கு ஸம்பவிக்கக் கூடிய, பிரயோஜனத்தை அர்த்தயாக வைத்துக்கொண்டு அதன் விஷயத்தில் ஸாவகாசமாயிருக்கும் மந்திரலிங்கங்கள் துர்பலமானவையேயாகும். ஆகவே, "அர்த்தமில்லாமல் நிஷ்பலமாகவிருக்கும் துர்பலப்பிரமாணமும் பிரபலப்பிரமாணமாக ஏற்பட்டுவிடு"மென்றநியாயப்படிக்கு, வேறொருவிடத்தில் அவகாசத்தை யடையாததும், ஸ்மார்த்தமாயுமிருக்கும் விவாஹவயோ விதியையனுசரித்து சுருதியிலிருக்கும் மந்திரலிங்கங்களுக்கும் அர்த்த விசேஷத்தையறிவிக்கவேண்டுமேயொழிய

வேறு அர்த்தத்தில் ஸாவகாசமாயிருக்கும் லிங்கங்களையனுசரித்து நிரவகாசமாகிய ஸ்மார்த்த விதிகளுக்கு அர்த்தம் செய்வதோ, அல்லது அவ்விதிகளின் அர்த்தத்தை மாற்றிவிடுவதோ, இவ்விரண்டும் நியாயமில்லை. இங்கு நவீனர்களின் மற்றொரு சங்கையாவது— மனுமுதலிய மகரிஷிகளால் கற்பிக்கப்பட்ட ஸ்மார்த்த விதி வசனங்களைத்தும் தேசகாலாதி பேதத்தையனுசரித்தும், காமக்ரோதம் முதலியவைகளை அனுசரித்தும், மகரிஷிகளால் கற்பிக்கப்பட்டிருக்கலாமோவென்று சம்சயமேற்படலாமாகையால் " हेतदर्शनात् " என்ற நியாயப்பிரகாரமாக அந்த ஸ்மார்த்த விதிகளுக்கு பிராமாண்யமென்பதில்லை. ஆகவே விவாஹ வயோவிஷயத்தில் அந்த ஸ்மார்த்த விதிகளை எப்படி பிரமாணமாக அங்கிகரிக்கக் கூடுமென்று இவர்கள் ஆக்ஷேபிப்பதும் ஸரியல்ல.

ஸர்வக்ஞர்களாகிய மகரிஷிகளனைவரும் தேசத்தையோ, காலத்தையோ, அல்லது வேறு ஏதாவதொன்றையோ, அனுசரித்து தர்மாதர்மங்களை மாற்றிவிட்டு தர்மசாஸ்திரங்களை வரைந்துவிட்டனரென்று நம்மைப்போல் நினைத்துக்கற்பித்துவிடுவது தகுதியாகுமோ? தேசகாலத்தையும், உலகரீதியையும் அனுசரித்து தர்மாதர்மங்களை மாறுதலாகத்தான் அனுஷ்டித்துக்கொண்டும் பிறரனுஷ்டிக்கும்படி சாஸ்திரங்களை இயற்றியுமிருப்பவர்கள் பிராமாணிகர்களாக எப்படியாவார்கள். வேதங்களினின்றும் வெளியாகும் தர்மாதர்மமிரண்டும் எக்காலத்திலும். எத்தேசத்திலும், வியவஸ்திதமாயும், நித்யமாயுமுள்ளதன்றோ? மனோதைர்யமில்லாமல் மனக்கலக்கம் கொண்டிருக்கும் நம்போன்றவர்களுக்குத்தான் சாஸ்திரங்களையும் அதினின்றும் வெளியாகும் தர்மாதர்ம ஸம்பிரதாயங்களையும் காலத்தை அனுசரித்து மாற்றிவிடவேண்டுமென்ற மூடஸ்வபாவம் இருக்கிறதேயன்றி. நமது முன்னோர்களாகிய மனு முதலிய மகரிஷிகளுக்கு இவ்வித கெட்டஸ்வபாவம் இருந்ததாக கற்பனை செய்வது ஒருபோதும் முடியாது. ஸரியும் அல்ல. நமது மகரிஷிகளோவெனின் அறியவேண்டியவைகளையெல்லாம் உணர்ந்தவர்கள். தர்மாதர்மங்களை பிரத்தியக்ஷமாய் அறிந்தவர்கள். ஸர்வேசுவரனுடைய அனுக்கிரஹம்பெற்றவர்கள். கத்திமுனையில் நடப்பதுபோல் தர்மமார்க்கத்தை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக்கொண்டு தானனுஷ்டிக்கும் விதமாகப்

பிறரையனுஷ்டித்துய்யும்படி தர்மதத்வோபதேசஞ் செய்யும்காருண்ய ஸ்வபாவமடைந்தவர்கள். இத்தகைய மஹிமையுற்று விளங்கும் மகரிஷிகளிடம், காலதேசத்துக்குத்தகுந்தபடியெல்லாம் தர்மா தர்மங்களையும், சாஸ்திரங்களையும் மாற்றிவிடும் ஸ்வபாவமிருப்பதாக சிறிதும் கூறுவதற்கில்லை. இக்காரணத்தாலேயே, ஸ்மிருதி கிரந்தங்களுக்குள் பிராசீனம் நவீனமென்ற காலவித்தியாசத்தைக் கற்பித்துக்கொண்டு அதையனுசரித்து அவைகளுக்கு அர்த்த விசேஷத்தை அறிவிக்கவேண்டுமேயொழிய் எக்காலத்திலும் ஏகவிதமாயுள்ள அர்த்தத்தைக் கூறுவது ஸரியல்லவென்ற தற்காலத்து நவீனமேதாவிகளின் மற்றொரு சங்கையும் அகன்றுவிட்டது. மகரிஷிகளுக்குள் பரஸ்பரம் காலபேதத்தையும், அதனால் ஸ்மிருதிகளிடத்தில் காலவித்தியாஸத்தையும் கற்பனைசெய்வது நன்கன்றென்று முன்பு நன்கு நிரூபித்துவிட்டோமன்றோ?

8 B. தவிர லௌகிககாரியங்களில் ஒருவாறு தங்கள் அபிப்பிராயப்படி காலவித்தியாசத்தை அனுசரித்து அடிக்கடி மாறுந்தன்மை ஸம்பவித்தாலும் ஸம்பவிக்கலாம் ஏனென்றால் லௌகிககாரியங்களில் தன்னிஷ்டப்படியெல்லாம் பிரவிருத்தி யாவருக்கும் ஏற்படலாமாதலின் அக்காரியங்களை அனேகவிதமாக மாற்றியும் அனுஷ்டிக்கலாம். ஒருவனொரு காரியத்தை ஒருவிதமாக அனுஷ்டித்து வருவானாகினதையே மற்றொருவன் மற்றொருவிதமாகவும் வேறொருவன் வேறொருவிதமாகவும் அனுஷ்டித்து வருகிறான். இன்னொருவன் ஒருவிதமாகவும் அக்காரியத்தையனுஷ்டிப்பதில்லை என்று உலகத்தில் மிகப்பிரஸித்தமன்றோ! ஆகையால் முதலில் ஒருவிதமாக ஒரு காரியத்தை அனுஷ்டானத்தில் அமர்த்திக்கொள்வதும், பிறகு குணதோஷங்களையனுபவிப்பதும் பிறகு அதை அனுஸரித்துத் தனது காரியத்தை வேறுவிதமாக அனுஷ்டிப்பதும், மறுபடியும் குணதோஷங்களையனுபவிப்பதும் மறுபடியும் அதையனுசரித்து வேறுவிதமாக மாற்றிக்கொள்வதும், லௌகிககாரியங்களில் இவ்விதம் ஸம்பவித்தாலும் அக்காரியங்களை அனுஷ்டித்தவர்களுக்குப் புண்யமுண்டென்றோ! அவைகளை இன்னவிதமாக அனுஷ்டித்தால் அதிகபுண்யம், இன்னவிதமாக அனுஷ்டித்தால் கொஞ்சம் புண்யமென்றோ. அனுஷ்டிக்காதவர்களுக்குப் பாபமுண்டென்றோ. சிறிதும் கூறுவதற்கு அவகாச

மில்லை. வைதிககாரியங்களோ அவ்விதமல்ல. அவை எக்காலத்தி லும் எத்தேசத்திலும் ஒரேவிதமாயும் ஸநாதனமாயுமுள்ளவை. ஆகவே நித்தியஸித்தமாகிய வைதிக காரியங்களில் முதலில் அனு ஷ்டிப்பதும் பிறகு அவைகளில் குணதோஷங்களையனுபவிப்பது அதையனுஸரித்துத் தமது அனுஷ்டானத்தைமாற்றிக் கொள் வதுமாகிய அடிக்கடி மாறுந்தன்மை உண்டென்று லௌகிககாரி யங்களில் போல் கூறுவது முற்றிலும் பொருத்தமுள்ளதன்று. அன்றியும் வைதிககாரியங்களை ஒருவனுக்கு அனுஷ்டிக்க விருப்ப மிருக்குமேயானால் முதலாவதாக அவன் அவைகளையனுஷ்டிப்ப தற்கு முந்தியே அவைகளின் வாஸ்தவ ஸ்வரூபத்தை நன்குணர்ந் திருக்கவேண்டும். வைதிககாரியங்களின் ஸ்வரூபத்தை இவ்வித மென்று நன்றாய் அறியாமலிருப்பவன் அவற்றை எப்படி அனுஷ் டிக்கக் கூடும். ஒரு காரியத்தை ஒருவன் அனுஷ்டிப்பதற்கு அதன் க்ஞானமவச்யமன்றோ. வைதிக காரியங்களை சரிவர அனுஷ்டிப்ப தற்கு அவைகளின் தத்துவக்ஞானம் முதற்காரணமாக நமக்கு இருப்பதுபோலவே நமதுமுன்னோர்களுக்கும் இருந்திக்கவேண்டு மென்றுதான் சொல்லவேண்டும். அவர்களும் தாமனுஷ்டிக்க விரும்பும் காரியங்களை நன்குணராமல் எப்படி அனுஷ்டித்துவரு வார்கள். இவ்வாறே முற்காலத்திலிருக்கும் நமது முன்னோர்க ளனைவருக்குமே முதலில் வைதிகதர்மதத்துவக்ஞானமும் பிறகு அதனனுஷ்டானமும் என்ற கிரமம் ஒப்புக்கொண்டே தீரவேண் டும். ஆகவே வைதிககாரியங்களை அனுஷ்டிப்பதற்கு முக்கியகாரண மாயிருக்கும் அவைகளின் தத்துவக்ஞானமவச்யமென்பது நெடு நாளாக ஸித்தமென்றுதான் அங்கீகரிக்கவேண்டுமாகையால் அது நித்தியசித்தமென்று ஏற்பட்டுவிட்டது. காரணம் அநாதியாகவும் நித்தியமாகவும் இருக்குமேயானால் காரியமும் அவ்விதமாகவே யல்லவா ஸித்திக்கும். இத்தகைய நித்தியஸித்த காரணவிசேஷத் தாலும் வேதம் முதலியப் பிரமாணவிசேஷத்தாலும், ஸநாதன வை திகதர்மத்தைத் தன்னிஷ்டப்ரகாரமாக மாற்றிவிடுவதற்கு யாரால் தான் முடியும். ஒருவனாலடிக்கடி மாற்றி யனுஷ்டிக்கப்படும் காரி யங்களெல்லாம் தர்மமாக ஏற்படமாட்டாது. தர்மம் என்பது எக்காலத்தும் மாறாமலிருக்குந்தன்மை அமைந்ததல்லவா? நல்ல வைத்தியர்கள் மருந்தின் குணநிசயங்களைத் தான் கண்டறிந்த பிறகு அவற்றைக் காலதேசவர்த்தமானத்தை அனுசரித்து மற்

றும் உபயோகித்துவரும்படி ரோஹிகளுக்கு உபதேசம் செய்ய மாட்டார்களென்பது போல் மனு முதலிய மகரிஷிகளும் தமக்கு பரம ஹிதமாக அனுபவிக்கப்பட்டிருக்கும் வைதிக வருணாச்ரம தர்மத்தையும் தேசகாலத்தை அனுசரித்து மாற்றியுபதேசிப்ப தில்லை. தாமனுபவித்து வந்தபடியேதான் தர்மதத்துவங்களை தமது ஸ்மிருதிக்கிரந்தங்களிலும் நிரூபித்துள்ளார்கள். ஆகவே ஸ்மிருதிகளிலும் நூதனமாக ஒருவிஷயத்தையும்அவர்களெடுத்து கூறவில்லை. "மகரிஷிகள் அர்த்தத்துடன் வேதத்தை பிரத்தியக்ஷ மாய் முதலில் அறிந்து பிறகு அவ்வனுபவ மூலமாக ஸ்மிருதிக்ரந் தங்களை இயற்றினார்கள்" என்ற மனுஸ்மிருதி வசனப்படிக்கு ஸ்மிருதிகளை மகரிஷிகளியற்றுவதற்கு வேதமூலமாகவே ஏற்பட் டிருக்கும் தர்மங்களின் அனுபவந்தான் முதற்காரணமாகப் புலப் படுகின்றதே யன்றி பிரத்தியக்ஷம் முதலிய லௌகிகாநுபவப் பிரமாண வாயிலாக ஏற்பட்ட அனுபவத்தை அனுஸரித்து ஸ்மிருதிகளை இயற்றியிருப்பதாகப் புலப்படவில்லை. அன்றியும் மகரிஷிகள் தமது ஸ்மிருதிக் கிரந்தங்களில் அக்னிஹோத்திரம் முதலிய தர்மங்களை நிரூபித்திருப்பதுபோல் வேறு யாராகிலும் அவ்விதமே ஸ்மிருதிக்கிரந்தமொன்றை இயற்றி அதில் அக்னி ஹோத்திரம் முதலியவைதிக தர்மங்களை நிரூபணம் செய்வார்க ளேயானால் அதிலிருந்து வெளியாகும் தர்மத்திற்கும் பிராசீன ஸ்மிருதிகளினின்றும் வெளியாகும் தர்மங்களுக்கும் சிறிதும்பேத மில்லை. ஆகையால் தான் வியாகரணமஹாபாஷ்யத்தை இயற் றிய பதஞ்சலி பகவானும், "வர்ணங்களின் ஸமுதாயவடிவமாகிய சப்தமென்பது அநித்தியமாயிருந்தாலும் அதனர்த்தம் மட்டிலும் அநித்தியமல்ல. நித்தியஸித்தமே யாகும்" என்று அர்த்தத்தை நித்தியமென்று நிரூபித்திருக்கின்றார்கள். இதுவும் யுக்தமேயாகும் ஏனென்றால் நாம் ஒரு கிரந்தத்தை இயற்றி அவற்றில் ஜோதிஷ் டோமம், அக்னிஹோத்திரம் முதலியவைகளை அனுஷ்டிப்பது தர் மேயாகுமென்று நிரூபணம் செய்திருந்தால் அந்தகிரந்தத்தினின்று வெளியாகும் ஜோதிஷ்டோமம் முதலியவை நூதனமானவையாக் ஸித்திப்பதில்லை யல்லவா? அத்தகைய அர்த்தவிசேஷத்தை யறி விக்கும் ஸ்மிருதிக்கிரந்தம் வெகு நூதனமென்று சொல்லப்பட்டா லும் அதிலிருந்து வெளியாகும் அர்த்தத்திற்கும் வேதத்தினின்று வெளியாகும் அர்த்தத்திற்கும் வித்தியாஸமில்லை. என்பதுபோல

வே மஹரிஷிகளுடைய ஸ்மிருதிக்கிரந்தங்களின் அர்த்தத்திற்கும் வேதங்களின் அர்த்தத்திற்கும் பேதமில்லையென்றுதான் ஒப்பவேண்டும். ஒருக்காலும் மஹரிஷிகளின் முகமண்டலத்திலிருந்து நூதனமாக ஒரு அர்த்தமும் வெளிப்படமாட்டாது. புராதனமாகியும் புனிதமாயுமுள்ள வேதார்த்தந்தான் வெளிப்படும்

8 C. அன்றியும் மற்றொன்று இங்கு கவனிக்கவேண்டும். இவ்வுலகில் அனைவருக்கும் உலகானுபவத்தால் அர்த்த விசேஷத்தை அறிந்துகொண்ட பிறகு அதனை வியவஹரிப்பதற்காக அவ்வர்த்தத்தை அறிவிக்கும் சப்தவிசேஷத்தில் பிரவிருத்தி ஏற்படுவது வழக்கமா? அல்லது முதலில் சப்தத்தை அறிந்தபிறகு அதன் மூலமாக அதன் அர்த்த விசேஷத்தில் பிரவிருத்தி ஏற்படுவது வழக்கமா? என்று கொஞ்சம் விசாரிக்கவேண்டும். அதில் உலகானுபவ மூலமாக அர்த்தத்தை முதலில் தெரிந்துகொண்ட பிறகுதான் அவ்வித அர்த்த விசேஷத்தைக் கூறும் சப்தவிசேஷத்தில் யாவருக்கும் பிரவிருத்தி நியாயஸித்தமென்று கூறும்பக்ஷத்தில் குடம் முதலிய லௌகிக பதார்த்தங்களில் இவ்விதம் கூறுவது ஒருவாறு நியாயஸித்தமென ஒப்புக்கொண்டாலும் வைதிக தர்மா தர்மவிஷயங்களில் இவ்விதம் சொல்வது தகுதியாகமாட்டாது. குடம் முதலிய வஸ்துக்களில் காணப்படும் அர்த்தத்தை அறிந்தபிறகு சப்த வியவஹாரத்தில் பிரவிருத்தி'' என்னும் நியாயத்தைக்கொண்டே வைதிக தர்மாதர்மங்களிலும் அவ்விதம் கற்பனை செய்யக் கூடாதோவெனின் இவ்விதங்கற்பிப்பது தங்களுக்குத் தான் தகுமேயொழிய எங்களுக்கல்ல. அப்படியே தங்களைப் போல் நாங்களும் அங்கீகரித்து விடும்பக்ஷத்தில் யாவராலும் நித்தியமென்று நிர்விவாதமாயொப்புக்கொள்ளப்பட்ட வேதங்களுமநித்தியங்களாகவல்லவா அங்கீகரிக்கும்படி நேரிடும். வேதங்களையுமநித்தியங்களாகவேதான் ஒப்புக்கொண்டுவிட்டால் தோஷமென்ன? என்றால் இவ்விதம் தைரியமாகக் கூறுந்தங்களிடம் சிறிதும் தோஷமில்லை. ஸர்வக்ஞர்களாயும் வெகு சூக்ஷ்மதரிசிகளாயும் அபாரமஹிமை வாய்ந்தவர்களாயுமிருக்கும் மனு, வியாசர் முதலிய மஹரிஷிகளும்கூட இவ்விதம் கூறுவதற்கு அஞ்சுவார்கள். அவர்களோ ஹிரண்யகர்ப்பர் முதற்கொண்டு தற்காலத்திய மானிடர்கள் ஈறாகவுள்ள யாவருக்கும் அனுதிநித்தியஸித்தமாகிய

வைதிகசப்தப்ரமாணத்தால்தான் தர்மாதர்மங்களின் அநுபவம் ஏற்படவேண்டுமேயொழிய ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் தர்மாதர்மங்களின் அநுபவமேற்பட்டபிறகு வைதிகசப்தங்களுக்கு ப்ரவிருத்தியென்பது கிடையாது என்று ஆங்காங்கு உபதேசித்திருக்கின்றனர். அன்றியும் குடம் முதலிய லௌகிக வஸ்துக்களின் அநுபவத்திற்குங் கூட ஏதாவதொருகாரணம் முந்தியே ஸித்தமில்லாவிட்டால் அவ்வநுபவம் ஏற்படுவதில்லையென்றால் வெகு ஸூக்ஷ்மமாயிருக்கும் தர்மாதர்மாநுபவத்திற்கும் ஏதாவது ஒரு காரணமில்லாதபக்ஷத்தில் உத்பத்தியேற்படுவதற்கோ நியாயமில்லையாதலால் தர்மாதர்மாநுபவம் யாவருக்கும் ஏற்படுவதற்குக் காரணமொன்று அவசியம் அங்கீகரிக்கத்தான் வேண்டும். அக்காரணத்தையும் தர்மாதர்மங்களைப்போலவே உலகாநுபவ மூலமாகவே அறிந்துகொள்ளவேண்டுமென்று சொல்லும் பக்ஷத்தில் அன்யோன்யாச்ரய தோஷம் ஸம்பவிக்கும். தர்மாதர்மாநுபவ காரணத்தை லோகாநுபவத்தைக்கொண்டும் லோகாநுபவத்தை அடைவதற்காக ஏதாவதொரு காரணவிசேஷத்தை அவலம்பித்துக்கொண்டும் அர்த்த நிர்ணயம் செய்யும்படி நேரிடுவதால் தர்மாதர்மாநுபவத்திற்குக் காரணமாக ஒப்புக்கொள்ளப்படும் வஸ்துவை உலகாநுபவத்தாலேயே அறிந்துகொள்ளவேண்டுமென்று சொல்வது சரியல்ல — இதற்காக அவ்வநுபவத்தின் காரணத்தை நித்யஸித்தமென்று ஒப்புக்கொண்டுவிடும்பக்ஷத்தில் வேதத்தைத் தவிர மற்றொரு காரணத்தை நித்யமாக அங்கீகரிப்பதைக்காட்டிலும் வேதத்தையே தர்மாதர்மாநுபவகாரணமாக அங்கீகரிப்பது தான் உசிதமாகும். அன்றியும்,

"शब्द इति चेन्नातः प्रभवात्" "अतएव च नित्यत्वं"

என்ற இவ்விரு ஸூத்திரங்களால் ஸ்ரீ வியாஸபகவான் "இப்ரபஞ்சத்திற்கு ஸ்ருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவனும் வேதங்களினின்றும் இவ்வுலகத்தை எப்படி ஸிருஷ்டிப்பது என்று முதலில் அநுபவத்தையடைந்துதான் விசித்ரப்ரபஞ்சத்தை ஸிருஷ்டித்ததாக ஸித்தாந்தம் செய்திருப்பதால் லோகாநுபவத்தைக்கொண்டு தர்மாதர்மங்களையுணரவேண்டுமென்ற கற்பனை எப்படி சங்கதமாகும். இவ்வண்ணமே ஆசார்யசபாஸ்வாமியும் விரிவாய்த்தமது பூர்வமீமாம்ஸாதரிசனத்தில் உரைத்திருக்கிறார்கள்,